உ
ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் துணை
ஸ்ரீ வரதராஜ பெருமாள் துணை

# SNASS Religious Trust, Thappalampuliyur

***Samashti Rudhrabhishekam -2019***

## சேவார்த்திகளுக்கு ஒரு முக்கிய விண்ணப்பம்

தனது மனது, உடல், மற்றும் பொருளினால் பல்வேறு வழிகளில் உதவி புரிந்து நமது ஸ்நாஸ் அமைப்பினை வெற்றிகரமாக 10 வது ஆண்டில் நுழைய செய்யும் அனைத்து சேவார்த்திகள், மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் , இந்த ஸ்நாஸ் அமைப்பு நன்றியை தெரிவித்துக்கொள்கிறது . மேலும் வரும் **"சமஷ்டி ருத்திராபிஷேகம் -2019"** நாம் எல்லோருக்கும் பெருமை தரக்கூடிய ஒரு நிகழ்வாகும்.

இந்த 10 ஆண்டுகாலத்தில் ஸ்நாஸ் அமைப்பு, நமது தப்பளாம்புலியூர் கிராமக்கோவில்களின் சிறப்பு வாய்ந்த பழம்பெரும் சம்பிரதாயங்கள் மற்றும் கலாச்சாரங்களை திரும்ப கொணர்வதுடன், நமது கோவில்களின் புனரமைப்பு மேலும் உட்கட்டமைப்பு பராமரிப்பு முதலியவைகளை சிறந்த முறையில் நிர்வகிப்பதில் பல மைல்கல்களை உருவாக்கியிருக்கிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

நாட்டின் பல்வேறு ஊர்களில் வசிக்கும் சேவார்த்திகள், அவர்களின் வருகை, கோவிலின் நடைமுறைகளில் கூரிய கவனிப்பு, முன்னேற்றத்திற்கான மேலான யோசனைகள் முதலியவைகளால் எங்களுக்கு கொடுக்கும் பலம் மற்றும் உற்சாகத்தினை இந்த தருணத்தில் பாராட்டாமல் இருக்கமுடியாது .

10 ஆண்டுகளுக்குமுன் ,ஸ்நாஸ் அமைப்பினை உருவாக்கும் தருணத்தில், நம் ஸ்நாஸ் குடுமபத்தினர் அனைவரும் **குறைந்தபக்ஷம் வருடத்தில் ஒருமுறையாவது** ( மே மாதத்தில் ) ஒன்றுகூடி, ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் சமேத ஸ்ரீ வ்யாக்ராபுரீஸ்வர ஸ்வாமிக்கு முக்கியமாக கருதப்படும் ருத்ரபிஷேகத்தை "கூட்டு" ( சமஷ்டி) முறையில் எல்லா குடும்பக்ஷேமத்திற்காக நடத்தி அருளைப்பெறுவது என்ற கருத்தை ஆலோசித்து முடிவெடுக்கப்பட்டது. மேலும் இந்த சமயத்தில் ஸ்ரீ வரதராஜபெருமாள் கோவிலில் காலங்காலமாக நடைபெறும் ஸ்ரீ ராமநவமியையும் சேர்த்து கொண்டாட முடிவு செய்யப்பட்டது .

இந்த ஒருங்கிணைப்பு முயற்சி, வெளியூர் சேவார்த்திகளுக்கு வந்து போவது ஓரளவு சிரமத்தை அளித்தாலும், செயற்குழு மற்றும் உள்ளூர்வாசிகளுக்கு ஒரு உற்சாகத்தை ஏற்படுத்துவதுமில்லாமல், இந்த அமைப்பின் பலமான ஒற்றுமை உணர்ச்சியை வெளிப்படுத்தும் என்று கருதப்பட்டது. மேலும் இந்த கூட்டுமுயற்சி நமது சேவார்த்திகளின் அடுத்த சந்ததியினை ஒன்றுசேர்த்து ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொள்ள ஒரு அரிய வாய்ப்பினை அளிக்கும்.

மேற்சொன்ன “நோக்கம்” மாறாமல் இருந்தாலும், கடந்த சில வருடங்களாக ஏதோ பல காரணங்களுக்காக இத்தகைய நிகழ்ச்சிகளில் சேவர்த்திகளின் பங்கேற்பு குறைந்து கொண்டுவருவது வருந்தத்தக்க விஷயமாக உள்ளது. வரமுடியாத காரணங்கள் தவிர்க்கமுடியாமல் இருப்பினும், இந்த நிலைமை, தனது முழு மனதை ஆத்மார்த்தமாக செலுத்தி, இத்தகைய பெரிய காரியத்திற்காக திட்டமிட்டு செயல்படுத்தும் நிர்வாக/செயற் குழுவிற்கு கிடைக்கவேண்டிய உற்சாகம் மற்றும் எதிர்ப்புகளுக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

கடந்த ஜனவரி மாதம் 26ந்தேதி நடந்த SNASS MEETல் இந்த விஷயம் மிகவும் விரிவாக பேசப்பட்டு, வரும் 10வது சமஷ்டி ருத்திராபிஷேகத்தை ( 10-12 th May 2019) ஸ்னாஸ்சின் **"ஒருங்கிணைப்பு /ஒற்றுமை வருட"மாக** கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டது. இதன் நோக்கம் எல்லா சேவார்த்திகளையும், இந்தவருடம் மட்டுமல்லாமல் வரும் எல்லா வருடங்களுக்கும் கண்டிப்பாக இந்த சமஷ்டி ருத்திராபிஷேகத்தில் கண்டிப்பாக கலந்துகொள்ளவேண்டும் என்று வலியுறுத்தி அதற்குவேண்டிய காரியங்களை செய்வது என்று முடிவு செய்யப்பட்டது.

மேலும்,வருடந்தோறும் மேற்சொன்னபடி, சேவார்த்திகளை, இதற்கான காரியங்களை முன்கூட்டியே திட்டமிட்டு தங்கள் பொன்னான நேரத்தை இந்த பங்கேற்பிற்கு ஒதுக்குமாறு வலியுறுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்த ஒரு காரியமே, செயல்/நிர்வாக குழுவிற்கு மேற்சொன்ன நோக்கங்களை செயல் படுத்த தேவையான உற்சாகத்தை அளித்து நிறைவேற்ற முடியும் என்று ஒட்டுமொத்த கருத்து தெரிவிக்கப்பட்டது. மேலும் கோவிலுக்கு தரிசனம் செய்ய வருடாந்திர வருகை தரும் சேவார்த்திகள்,அவர்களின் பயணத்தை முடிந்த அளவுக்கு ,இந்த அரிய சந்தர்ப்பத்துக்கு வருமாறு பயன்படுத்தி திட்டமிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வருகை தரும் சேவார்த்திகளின் பயணத்தின் சௌகரியத்தை முன்னிட்டு கிராமத்தில் கீழ்கண்ட உதவிகளை செய்துகொடுக்க ஸ்நாஸ் மற்றும் உள்ளூர்வாசிகள் முன்வந்திருக்கிறார்கள்

1. திருவாரூரில் இருக்கும் ஹோட்டல்களில் சேவார்த்திகளுக்கு ரூம் ரிசர்வ் செய்வதில் கணிசமான நபர்களின் புக்கிங் இருந்தால் ஹோட்டல் நிர்வாகத்துடன் பேசி ஓரளவு சலுகை ( concession) வாங்கிக்கொடுக்க உள்ளூர் செயல்குழு முன்வந்துள்ளார்கள்.

2. பொதுத்தங்கும் வசதி தேவைப்படுவோர்களுக்கு ,அந்த தேவை ஒரு கணிசமான சேவார்த்திகளுக்கு தேவைப்பட்டால் ஸ்நாஸ் அமைப்பு , அவர்கள் வசதிக்காக ஒரு சமுதாய/கல்யாண மண்டபத்தை வாடகைக்கு எடுத்து உதவ முன்வந்துள்ளது.

மேற்சொன்ன உதவிகள் தேவைப்படுமெனில் சேவார்த்திகள் தங்கள் தேவைகளை, வேண்டிய அவகாசம் கொடுத்து முன்கூட்டியே தெரிவிக்கவேண்டுகிறோம் . இதன்பொருட்டு வேண்டிய தேவைகளை *பிப்ரவரி மாதம் 28ந்தெதிக்குள்* கீழ்கண்டவர்களை தொடர்புகொண்டு அவர்கள் பெயர் /விலாசம் /தொடர்பு எண் /பயணம் செய்யும் நபர்கள் எண்ணிக்கை/தேவையான வசதி முதலியவைகளை தெரிவிக்க கேட்டுக்கொள்கிறோம்.

சேவார்த்திகளுக்கு வேண்டிய சாப்பாட்டு வசதிகள் அனைத்தும் நமது கிராமத்தில் ஸ்நாஸ் அமைப்பு எப்போதும்போல் ஏற்பாடு செய்துவிடும்

<u>தொடர்புகொள்ளவேண்டிய விவரங்கள்:</u>

Mr. S.Kalyanaraman --- 9942984901/9443162527 ------------------ kalyanam.skr@gmail.com

Mr. S. Ramamurthy-----9942984902/9500758118------------------ ramamurthy6363@gmail.com

Mr.T.P.Venkataraman----9840036514/(044)243110916------------ tpvraman@yahoo.com/ snasstpuliyur@gmail.com

Ms.K. Vaidehi -------9551066125-------------------------------------vaidehi.krishnamurthy@gmail.com/ snasstpuliyur@gmail.com

ஸ்நாஸ் செயல்/நிர்வாக குழு,மறுபடியும் சேவார்த்திகளுக்கு மேற்சொன்ன விண்ணப்பத்தை வைத்து, இந்த வருடம் மற்றுமின்றி வரும் எல்லா வருடங்களிலும் கிராமத்திற்கு வருகைபுரிந்து இந்த வைபவத்தில் கலந்துகொண்டு அதனை வெற்றிகரமாக நடத்திக்கொடுப்பதுடன் செயல்/நிர்வாக குழுவினரை ஊக்குவிக்கும்படி ஆர்வத்தோடு கேட்டுக்கொள்கிறது

உங்கள் தொடர் ஆதரவுக்கு எப்போதும் நன்றிகூறும்

இங்ஙனம்

ஸ்நாஸ் அடிப்படை நிர்வாக க்குழு மற்றும் கிராமவாசிகள்

------------------000000000000----------------